உ

சிவமயம்.

வேதானந்தசுவாமி

பதிகம்.

சக்தப்பிரதி.

க-ம் பதிப்பு.

சென்னை
ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] **1905.** [பை-௩.

ய

கடவுள் துணை.

வேமனானந்தகுருபேரில் பதிகம்.

—(௧)—

ஓங்காரரூத்திர சதானந்தவாரியில் ஓரெழுத்தான பரனே, ஓரியாய்நீயெனக் கஞ்செழுத் தொருசெவியி லோதிவைத்தவனல்லவோ, ஆங்காரமற்று சுகமற்று துக்கமுமற்று யைம்புலன்பாசமற்று, ஆகாசம் கிடுகி டென்றிடியிடித் தமுர்தமழை யாறுதரத்தில்பொழிய இரீங்காரநாதமணி விந்துவுக்குள்ளாகியிரவுச்சிபுருவ நடுவின், இரதிமன்மதன்போல விளையாடுவதைக்கண் டிராகமிட்டுனதுமுன்னே, வீங்காமனின்றுனது திரு வடியின்மகிமையினை விகசிப்பதெக்காலமோ, வேதா ந்த பரமசிவ மெஞ்ஞான மூர்த்தியே வேமனானந்த குருவே. (௧)

அறியாத பாலகனை யழைத்து புத்திகள் சொல்லி அன்புவைத் தாள்வதற்கு, ஐயையோநானுனக்காகா தபாவியோ அப்பனே யத்வீதனே, மரியாதை யாக வெனை ரக்ஷிக்க தருணமிது மாய்கைசும் மாரதேவர்,

மனமகிழ்ந்தின்றைங்கி வாராமல்போனிலோ மடியில்
கைபோட்டிழுப்பேன், பரியாசமென்றுவுன் சிந்தை
தனிலிவ்வார்த்தை பாராட்டவேண்டுவதிலே, பக்தியா
யுன்றனை மறவாமலனுதினம் பாங்குடனிராமயத்தின்,
வெரியாகிலும்தந் தகண்டபரிபூரண விவேகமறிவிக்
கொணுதோ, வேதாந்த பரமசிவ மெஞ்ஞான மூர்த்
தியே வேமனானந்த குருவே. (௨)

பஞ்சபூதங்களொடு யானுமொருபூதமாய் பட்ட
துறைமெத்தவுண்டு, பக்ஷமுடன் கேழ்ப்பியா மாகில்
சொல்லக்கேளு பரமனேபரமயோகி, சஞ்சலப்படுகு
ழியில் கர்மமென்றெண்ணமல் சந்தோஷ மாய்விழுந்
து, சத்தியநிலையின்னதென் றறியாமல்மூடனாய் சகிக்
காமலன்றுகெட்டு, கொஞ்சமாகிலுமுனக்கஞ்சலிகை
செய்யாமல் குரங்காய்முழிக்கலாச்சே, கோணமல்வ
ந்தெனக் குயர்வானவழிகாட்டி கோரிக்கையின்படி
க்கி, வெஞ்சினமறந்துமக ராஜசெம்பீரன்போல் வித்
தைதனிலுட்காரவை, வேதாந்தபரமசிவ மெஞ்ஞான
மூர்த்தியே வேமனானந்தகுருவே. (௩)

எத்தனைபயந்தடுமை சரணமென்றழுதாலும் என்
மேலுனக்குகருணை, எள்ளளவிலாதது விதிவசமிதெ
ன்னமோ வெப்போதுமொருதிட்டமாய், யித்தனைக

ரேகுண மேன்சித்விலாசனே யிந்நஜகமாய்கை தன்னுள், இரவுபகலச்சமற முச்சந்தில்பத்துவித யிங்கிதக்குயில்கள்பாட, முத்தியென்கிறசரியை மோக்ஷவைராக்கியமாய்முத்தமிட்டணைவதற்கு, முட்டாளையாட்கொண்டு மெய்ஞ்ஞானமறிவித்து மூக்குனுனிமீதில்சதமாய், வித்திலாமணிவிளக் கவியாமலெரியவே வரமருளவேண்டுமென்று, வேதாந்தபரமசிவ மெஞ்ஞானமூர்த்தியே வேமனுனந்தகுருவே. (௪)

தத்துவக் குப்பையை கொளுத்தி தூளிதமாக்கி தண்ணியில்கலக்கிவிட்டு, தனயனுன்னுளாவதற்குயெண்ணங்கொண்டு தாமசகுணத்தைவெட்டி, சத்துசித்தொள்ளுக்கி யட்டாங்க யோகநெறி சாதிக்கவே நாடொறும், சரணமென்றுனைபணியு மடியார்க்குமடுமையாய் சத்யமாய்கைமுழங்கி, பத்துமாதங்கமாய் தங்கநடுகெம்பாகி பரமசிவநாதசுடராய், பவழமாய் படிகமாய் நீலமாய்கண்கொண்டு பார்த்ததெல்லாம் பிர்ம்மமாய், வித்துவாய்வித்துநடு முளையாகிநிற்கவே விதமருள் செய்யவேண்டும், வேதாந்தபரமசிவமெஞ்ஞானமூர்த்தியே வேமனுனந்தகுருவே. (௫)

எட்டாதவாசிகொடி மரனுச்சிதனிலேறி எச்சரிக்கையாகனின்று, எண்சாண் துரித்திதனி லெரிகின்ற,

நீதனிய எங்குமேலாடுபொருளாய், முட்டாதகாரா ம்பசுப்பால்தனைவேண்டி முக்கண்ணுவருட்டிநலமாய், முலையுண்பதற்குமொன் றஞ்சாமல் சையாய் மும்மல ங்களையொழித்து, கட்டாதகட்டுபடு மந்திரம் ஜெபிப் பர்தனை காரணகயிற்றில்கட்டி, காடிலாமலைமீதில்வே றிலாமவுனபயிர் காம்பிலாதருவாளினால், வெட்டாத வெட்டருத் தொருகொடியில்சோறுக்கி வெறிகொ ண்டு உண்பதென்றோ, வேதாந்தபரமசிவமெஞ்ஞான மூர்த்தியே வேமனானந்தகுருவே. (சு)

ஆதியாயந்தமா யந்தநடுவாதியாய் ஆறுமுகருத்ரா க்ஷமாய், ஆட்டமாய்பாட்டமாய் வோட்டமாய்நாட் டமா யானந்தகுஞ்சிரிப்பாய், சோதியாய் மின்னலா ய் மின்னல்நடு மாசியாய் சொக்கலிங்கக் கடவுளாய், சோகமாய் மோகமாய் தாகமாயென்மனதை சோதி க்கவந்தகணமாய், நீதியாய்நேமமாய் நேமனடுமுத்தி யாய் நீரோட்டவெளிருமிளியாய், நீட்டமாய்வாட்ட மாய் தோட்டமாயெந்நாளும்நீங்காதனந்தவடிவாய், வேதியாய்கோபியாய் கோபமாயணுவாகி விண்ணே றவிட்டகனியே, வேதாந்தபரமசிவ மெஞ்ஞானமூர் த்தியே வேமனானந்தகுருவே. (எ)

தன்னைத்தானறியாமல் நாய்போலுழுளறினல் தாரகம்வெளியாகுமோ, தானென்றவாணவப் பேயனைக் கொல்லாமே தப்பிதங்கட்போகுமோ, பொன்னையும் மண்ணையும்பெண்ணையுமறக்காமேபொய்மெய்யுமொன்றுகுமோ, போதமாய்நாதமங் கீதமணிகேளாமெ பொம்பரம்மேலாடுமோ, யென்னையானறியாமேதலை வனைக்காணுமே யெட்டுதிக்கொன்றுகுமோ, யெச்சலென்றமுர்தத்தை யண்ணாக்கிலுண்ணுமே லெந்தனுட்பசியாறுமோ, வுனைசதாகாலமாய் கீழ்மேல் துதிக்காமே வுன்னுடைய மனமுருகுமோ, வேதாந்தபரம சிவ மெஞ்ஞானமூர்த்தியே வேமனானந்தகுருவே.

மண்ணுநடுவப்பாகி யப்புதனில் விஷ்ணுவாய் மாய்கைநடு சங்கரனுமாய், மனதுநடு பிரம்மமாய் பிர்ம நடு ஞானமாய் மாணிக்கக்கொடிவிளக்காய், கண்ணு நடுரூபமாய் காதுநடுசத்தமாய் கண்டநடுமந்திரமுமாய், கானல்நடுனுந்தலாய் னுந்தல்நடுகானலாய் காணுத வெண்சாரையாய், பெண்ணுநடு வாணுமாய் வாணு நடுபெண்ணுமாய் பெரியநாமக்காரனய், பேயனைப்பித்தனய் வெறியனய்வூமையாய் பேரின்பமவுனனெறியாய், விண்ணுநடுவிந்துவாய் விந்துநடுநாதமாய் விளை

யுர்டுகின்றபரனே, வேதாந்தபரமசிவமெஞ்ஞானமூர்த்தியே வேமனனந்தகுருவே. (௯)

சித்தியூனைச்சார்ந்த போடிமலை குகையினுட்சித்தன்புமீதில்நாட்டி, சிறிதுநாளின்பதுன் பங்களுடனடிபட்டு சிறியனும் நாமதியானம், பக்தியாயுருவேத்துனைக்காண்பதற்காக பதிநான்குலோகமெட்டிற், பஞ்சபூதங்களை மொடிக்குன்னைகண்குளிர பார்க்கலுற்றருமையானே, புத்தியுள்ளப்பிள்ளை என்றெனக்குபதேசம் புண்டரீகாக்ஷனரிய, பிரியமாய்நரசிங்க தாசனேகேளென்று பட்சமென்மீதில்வைத்து, வெற்றிலையும்பாக்குசுண்ணும்புமூன்றொன்றாக விபரமருளிட்டதுரையே, வேதாந்தப:மசிவ மெஞ்ஞான மூர்த்தியே வேமனனந்தகுருவே. (௰)

வேமனனந்தசுவாமிபதிகம்

முற்றிற்று.